**Letter Admin.O.P. No. 224/2023**

**01.08.2024**

ம.த.சா. 1- திருமதி. நீலாவதி , க/பெ. வெங்கடேசலு

மனுதாரர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**2 மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை. 2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. குறுக்கு விசாரணை இல்லை.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை .**

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம். 14.55 மணி.

எனது அப்பா பெயர் ராகவன். அம்மா பெயர் ருக்குமணி. நான் எனது பெற்றோருக்கு 4வது மகள் ஆவேன். மேனகா என்பவர் எனது மூத்த சகோதரி. 2வது எதிர்மனுதாரர் குப்புசாமி எனது மூத்த அண்ணன். 3வது எதிர்மனுதாரர் Harikrishnan எனது தம்பி ஆவார். 4வது எதிர்மனுதாரர் கோவிந்தராஜலு என்னுடைய கடைசி தம்பி ஆவார். எனது கணவர் பெயர் வெங்கடேசலு. எனக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். மஞ்சுளா, மணிகண்டன், பத்மாவதி என்பவர்கள் எனது பிள்ளைகள். நான் வேலை எதுவும் செய்யவில்லை. எனது கணவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் குமாஸ்தாவாக வேலை செய்கிறார். என் கணவர் என்னுடன் நீதிமன்றத்திற்கு இன்றைய தினம் வரவில்லை. மேனகா வேலை எதுவும் செய்யவில்லை. குப்புசாமி, Harikrishnan சென்னை உயர்நீதிமன்றத்தில் வேலை செய்கிறார்கள். கோவிந்தராஜன் அரசு வேலை செய்யவில்லை, என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. கோவிந்தராஜன் கூலி வேலை செய்கிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்தில் அனைவரும் நல்ல வேலை மற்றும் வருமானம் பெறுகிறோம் என்றால் சரியல்ல. கோவிந்தராஜன் கூலி வேலை செய்கிறார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு வீடு வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம்

தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப் படிக்க தெரியாது. நான் படிக்கவில்லை. இந்த மனு தாக்கல் செய்வதற்கும் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கும் வழக்கறிஞரை தவிர வேறு யாரும் உதவி செய்யவில்லை. என்னிடம் தற்போது காட்டப்படும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் போட்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தை யார் எனக்கு படித்து காட்டினார்கள் என்றால் எனது மகன் மணிகண்டன் படித்து காட்டினார். மனுவில் உள்ள விவரங்கள் என்னை விட எனது மகனுக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான், வீட்டு விசயமாக மனு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு மனு மற்றும் சத்தியபிரமாண வாக்குமூலம் பற்றி எதுவும் தெரியாததால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எனக்கு ஒரு உயில் எழுதிக்கொடுத்ததாகவும் அந்த உயிலை ஊர்ஜிதப்படுத்துவதற்காக இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் எனது பெயரில் இந்த மனு சொத்து சம்மந்தமாக எழுதி வைத்த உயிலின் தேதி என்னவென்றால் எனக்கு தெரியாது. 23.06.2011 அன்று எனது தகப்பனார் இந்த மனு சொத்து சம்மந்தமாக உயில் எழுதி வைத்துள்ளார் என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த உயில் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது. எனது மகன் மற்றும் வழக்கறிஞருக்கு தெரியும். எனது தகப்பனார் என்று இறந்தார் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. எனது தகப்பனார் 06.08.2011 அன்று இறந்துவிட்டதாக மனு மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயில் எனக்கு யார், எந்த தேதியில் கொடுத்தார்கள் என்றால் எனது மூத்த அண்ணன் குப்புசாமி கொடுத்தார். எந்த வருடத்தில் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் 06.08.2011 அன்று இறந்துவிட்டார், அதன்பின்பு அந்த உயிலின்படி சொத்து எனக்கு சேர வேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உயிலில் இரண்டு பேர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள், அவர்களில் இரண்டாவது சாட்சி மணிகண்டன் எனது மகன், மகேஷ் என்பவர் மற்றொரு சாட்சி ஆகும். எனது மகன் மணிகண்டனுக்கு 2011ல் என்ன வயது என்றால் 18 வயது இருக்கலாம். 18 வயதிற்கும்

குறைவாக இருக்கும் என்றால் சரிதான். அதனால் எனது மனுவில் எனது அண்ணன் உயிலை 2021ல் கொடுத்ததாகவும் ஆனால் எனது மகன் கையொப்பம் செய்துள்ளதால் அதற்கு முன்பாகவே எனக்கு தெரியும் என்றாலும் என்னிடம் தான் உயில் இருந்தது என்றாலும் 2011ம் வருடம் எனக்கு உயில் பற்றி தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு உயில் பற்றி 2011ம் வருடம் தெரியாது. 2021ல் எந்த தேதி, மாதத்தில் உயிலை என்னிடம் எனது அண்ணன் கொடுத்தார் என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் உயிலை எந்த இடத்தில் வைத்து கொடுத்தார் என்றால் வீட்டில் வைத்து கொடுத்தார். 2ம் எதிர்மனுதாரர் அவருடைய பதில் உரையில் உயில் கொரட்டூர் காவல் நிலையத்தில் வைத்து கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல, வீட்டில் வைத்து தான் கொடுத்தார். அவர் எனக்காக நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிப்பாரா என்றால் வருவார்.

<u>குறுக்கு விசாரணை பகுதி முடிந்த நேரம் 15.25 மணி.</u>

**(4ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.